## ஏப்ரல் – 14

**"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்." - ஏசா 53 : 12**

போதகருடைய அடிச்சுவடுகளில் நடக்கிற ஒவ்வொருவருக்கும் கெத்செமனேயின் சில அனுபவங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அது போலவே, ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் போதகருடைய எல்லா அனுபவங்களையும் ருசிபார்த்தாவது இருக்க வேண்டும். ஆகவே கிறிஸ்துவின் உடன் மாணாக்கர்களும் "இந்த சிறியருமான" சகோதரருக்கு ஊழியம் செய்ய சந்தர்ப்பங்களுக்காக நம்மை சுற்றிலும் பார்க்க மறவாதிருப்போமாக. ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுகிற எல்லோர் மேலும் வரும் நிந்தைகளோடு நாம் எதையும் சேர்க்காதபடி ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய சிலுவைகளையும், கஷ்டங்களையும், வழியில் ஏற்படுகிற சோதனைகளையும் தாங்க உதவவும், அனுதாபத்தின் வார்த்தைகளைச் சொல்லவும், ஒவ்வொருவரும் கவனமாக இருப்போமாக. இவ்விதமாக கல்வாரியின் பாதையில் அவர் தனது சிலுவையை சுமக்க அவருக்கு உதவும் சந்தர்ப்பத்தை எவ்வளவு உயர்வாக மதித்திருப்போம் என்று, நமது தலைவரும் கர்த்தருமாயிருக்கிறவருக்கு மிகவும் சிறந்த முறையில் காண்பிக்கக் கூடும்.

**-Z '99, 125 (R 2473).**

நம்முடைய இரட்சகருடைய மரணம், வெளிப்படையாகத் தோன்றுகிற மரணமல்ல, அவருடைய மரணம் வாஸ்தவமானது அவருடைய ஜீவன் மரணத்தில் ஒப்புவிக்கப்பட்டது. இந்த மரணத்தின் போக்கு 3½ ஆண்டுகளைக் கொண்டதாயும், மெதுவானதாயும் இருந்தது. அந்தப் போக்கு சரீர சம்பந்தமான, மனது சம்பந்தமான துக்கத்தையும் இம்சையும் கொண்டதாயிருந்தது. மூன்று நாட்களின் பாகங்களில் நமக்காக அவர் அழிவிலிருந்தார். அவருடைய கடைசி நேரத்திலும் நிலைமை திருந்தவில்லை. ஒரு பாவமும் அறியாதவராகவும், குற்றமற்றவராயும் இருந்தும் அவர் ஒரு பாவியைப் போலவும், குற்றவாளியைப் போலவும், பாவிகளோடும், குற்றவாளிகளோடும் கொலையுண்டார்.

**- P '27, 55.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 3:15; சங் 22:1-21; 69:21; ஏசா 53; தானி 9:26; சகரி 12:10; 13:7; மத் 27:1-50; மாற் 15:1-37; லூக் 23:1-46; யோவா 18:28; 19:30.

**கோபுர வாசிப்பு : Z '12, 228 (R 5064)**

**வினாக்கள் :** யேசுவின் மரணம் இந்த வாரத்தில் என்மீது ஏற்படுத்திய விளைவு என்ன? எந்த சூழ்நிலைகளில்? பலன்கள் என்ன?